உ

சிவமயம்.

சேண்பாக்கம்


ஸ்ரீ செல்வ விநாயகர்

இரட்டை மணிமாலை.

ஆக்கியோன்

C. S. இராஜாப் பிள்ளை

வூர்ஹீஸ் காலேஜ், Ge



வெளூர்:

திப்பிக்கப்பட்டது

[விலை 6-பை

உ

சிவமயம்

சேண்பாக்கம், ஸ்ரீ செல்வ விநாயகர்,
இரட்டை மணி மாலை

~~~~

வெண்பா.

சீரோங்கு தொண்டைத் திருநா டதிற்சிறந்த
பேரோங்கு பாலிப் பெருநதியின்—நீரோங்கு
ஓங்குறு சேண் பாக்கத் தொளிரும் விநாயகனே
ஈங்கென் னிடர்தீர்த் தருள். (1.)

கலித்துறை.

அருளை யுருவ மெனக்கொண்டமர்ந்த அருமணியே
அருளே விரும்பு மடியார் மகிழ வனைவருக்குந்
தெருளே யளித்துத் திருவடிப் பேறுந் தெரிக்குநல்ல
பொருளே புலவர் புகழுஞ்சேண் பாக்கப் புகர்முகனே (2.)

வெண்பா.

புகர்முகனே பொல்லா மணியே புனிதா
அகவிருளை நீக்கி அறிவே—மிகவெனக்கு
நீயருள்செய் வாய்நிமலா நித்தா நிருமலன்றன்
சேயே சிறியேனைக் கா. (3.)
~~~~

கலித்துறை.

காவளர்ந்தோங்கிக் கருணை மிகுந்த கற்பகமென்
றியாவரு மேத்திடுஞ் சேணுறு பாக்கத் தினிதமர்ந்து
மேவினர்க் கீண்டுந் துயர்கெடுத் தாண்டுவிண் ணுறையுந்
தேவரும் போற்றும் பதமருள் தெய்வத் திருமணியே. (4.)

வெண்பா.


திருமணியே தித்திக்குந் தேனே கரும்பே
ஒருமணியே அன்பிற் குவந்த—பெருமணியே
ஏர்வளங்கொள் வேளாளர் எங்குநிறை சேண்பாக்கத்
தேர் நகரோய் என் துணை நீயே. (5.)

கலித்துறை.

துணையா யிடப்பாற் றடியிடை கொண்டருள் தூயபரன்
துணையா யெனது துயர்கெடுத் தாண்டோன் மகிழ்ந்தளித்த
துணையாய கோட்டொரு மாமுகத் தூமணி துயரகற்றித்
துணையாயெனக்குமுன் தொல்லோர்பரவிடத்தோன் றகவே
(6.)

வெண்பா.

தோன்றாத் துணையாகுந் தூய சிவன்மகனே
தோன்றுந் துணையாகித் துன்பகற்ற—ஆன்றோர்கள்
வாழ்தரு சேண்பாக்கத் தமர்ந்து வழிபடுவார்
பிழைதனை நீப்பன் பெரிது. (7)



கலித்துறை.

பெரியார் பிரியாப் பெருமையுடையநற் றொண்டையெனுந்
திருநாடதனிற் றிகழ்ந்து விளங்குறும் பாலியின்சார்
அருமாப் பொருளுண ரந்தணர் வாழ்த்த வமர்ந்தருளுங்
குருமாமணியே குவலயம் போற்றுங் குருபரனே. (8)

வெண்பா.

பாவுபுகழ்ச் சேண்பாக்கத் தேவேநின் பாதமலர்
பரவும் பரிசே யருள்வாய்—திருவருளாஞ்
சீரடியோய் தேவரெலாம் போற்றுஞ் சிறப்புடையோய்
ஆருமிவேற் காத்தருள்க வார்ந்து. (9)

கலித்துறை.

ஆருந் துணையில்லை அத்தாவுன் பாத மருந்துணையாம்
பேரும் புகழும் பெருமையும் பெற்றிப் பெரும்புவியில்
ஆரும் மதித்திடு வேளாளர் வாழு மணிநகராச்
சேரும் பெருவளச் சேண்பாக்கச் செல்வ விநாயகனே (10.)

வெண்பா.

விநாயகனே வேழ முகத்தோய் விகிர்தா
மனமாதி மூன்று மகிழத்—தினமுநினைக்
கண்டு பரவிக் கருதியே நானுய்ய
அண்டர் தலைவா வருள். (11.)

கலித்துறை.

அருவு முருவமு மாகிநின் றன்ப ரிடர்களையும்
பொருவில் புனிதன் புராதனன் சைவன் புகழ்விளக்கும்
அருமைத் திருமக ளாகியகில விடர்களையுந்
திருவருள் தானென் னிருவினை நீக்குந் திருவருளே (12.)

வெண்பா.

திருவளர் சோலைத் திகழ்தருசேண் பாக்க
மருவிவள ரத்திமுக மாமணியை—உரிமையுடன்
போற்று மடியார் புகழ் பெறுவர் பொன்பெறுவர்
மாற்றமிது மெய்யா மதி. (13)

கலித்துறை.

மதியணி செஞ்சடை மாதேவன் தூய மனத்தடியார்
மதியிடத் தார்ந்து மகிழ்வான் சிவனருள் மாமகனும்
மதிப்பிள வென்னவொளிர்கொம் புடையவன் மாவளஞ்சேர்
மதிநிறை சான்றோர்மருவுஞ்சேண் பாக்கமகிழ்பவனே (14.)

வெண்பா.

மகிழ்ந்தேத்து மாந்தர் வினைவலியை மாய்க்கும்
மகிழ்ந்தேதன் பொன்னடிக்கீழ் வைக்கும்—மகிழ்ந்தன்பர்
ஒளிருஞ்சேண் பாக்கத் துறைந்தே நிலவுந்
தளிர்நிறையுங் கற்பதருவே, (15.)

கலித்துறை.

தருநிழ லார்ந்த வரசனுந் தாமரைத் தேவு மவன்
தருந்திரு மாலுந் தாழ்ந்து வணங்குந் தகைமை பெறு
தருநிக ரம்மான் சதாசிவன் சங்கரன் றானளித்த
பெருமக னேநல் விநாயக னாய பெருந்தகையே (16.)

வெண்பா

பெருந்தகையே யுன்னடியைப் பேணு மெனது தவம்
அருந்தகைமை யுற்றதே யன்றோ—பெருந்திறத்துச்
சேண்பாக்கத் தேவனே செல்வ விநாயகனே
ஆண்டகையே அன்பருளு வாய் (17.)

கலித்துறை

அன்புனக் கென்று மறவா தடியே னகமதனில்
நன்கு பதியவு நல்லார்ப் பரவவு நன்னயனம்
இன்பம் பெருக இடையறா துன்னடி யேத்துதற்குஞ்
சின்மய நீயருள் சேண்பாக்கச் செல்வ விநாயகனே (18.)

வெண்பா.


செல்வ விநாயகனே சேண்பாக்கத் தன் [illegible]
பல்கும் பரமனே பாரதனில்—அல் [illegible]
வில்வங்கொண் டுன்னை விரும்பி [illegible] ன்வழுத்தப்
பல்வளமும் பாலித் தருள் (19.)

கலித்துறை

பாலி நதியாடிப் பானீ றணிந்து பரவசமாய்
எலவழுத்து மடியா ருட னுறைந் தின்பமுற
ஞாலம் புகழ்ந்திட நாளுந் துதித்து நயந்தவர்க்குச்
சீல மளித்திடுஞ் சேண்பாக்கச் செல்வ விநாயகன்சீர் (20)

சுபம்

திருச்சிற்றம்பலம்





புஸ்தகம் கிடைக்குமிடம்

R. வெங்கிடாஜலம் அண்ட் கம்பெனி,

புஸ்தக ஷாப், லாங்கு பஜார், வேலூர்.